Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Life of the Women in Sangam Literature

**Dr. G. Padma Priya,** Assistant Professor, Dept of Tamil, M.O.P. Vaishnav College for Women, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-2108-586X**
**DOI: 10.5281/zenodo.14744996**

## Abstract

*The women who lived during the Sangam period were known for their multifaceted qualities. Their character was splendid and worthy of great respect. They were revered for their attributes of fearlessness, modesty, shyness, and encouragement. Even when they were raised under the support of their parents, and later when they settled into their new homes after marriage, their lives were considered worthy of admiration. The virtue of a woman's education was highly valued and celebrated in the Sangam Period. Tamil Literature shows us that women of the Sangam period chose and played games that suited their physical health and condition. They used to play flower picking, building sandcastles, playing with funnels, swinging a pendulum, playing ball, handling and playing with Kazharsikkai, Ammanaikkai, etc., These are some of the activities that women played in their youth. Hence, the article provides authentic sources from the Sangam poetic lines for reference.*

**Keywords:** Sangam Literature, Tholkapiyam, Administrative Power, Personality Traits

## References

[1] Balasubramaniyan, Ku. Vae. Prof. *Purananuru (Mulamum Uraiyum*). New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October. 2014.
[2] Balasubramaniyan, Ku. Vae. Prof. *Nattrinai (Mulamum Uraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October 2014.
[3] Balasubramaniyan, S. Dr. *Sanga Kala Magalir*, Paari Nilaiyam, Chennai. 1983.
[4] Dhakshianamoorthy, A. Dr. *Aingurunooru (Mulamum Uraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October. 2014.
[5] Jayabal, R. Prof. *Agananuru (Mulamum Uraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October 2014.
[6] Jeyakumari, S. Dr. "Sanga Ilakkiyangalil Pengalin Aalumai." *Puthiya Avaiyam*, A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts & Humanities, June 2023, ISSN:2456-821X.
[7] Lenin, K. Dr. "Sanga Ilakiyathil Vazhviyal Nokkil Pengal." *Iniyavaikatral International Tamil Studies*, July2021, E – Journal, ISSN – 3048-5495.
[8] Mohan, R. Prof. *Pathupaattu, Part – 1, (Mulamum Uraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October 2014.
[9] Mohan, R. Prof. *Pathupaattu, Part – 2, (Mulamum Uraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October 2014.
[10] Nagarasan, V. Prof. *Kurunthogai (Mulamum Uraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October 2014.
[11] Subramaniyam, S.V. *Tholkappiya Theliyurai*. Manivasaga Pathipagam, Chennai, Eight Edition, 2006.

[12] Viswanathan, A. Prof. *Kaliththokai (Mulamum Vuraiyum)*, New Century Book House Pvt. Ltd., Chennai. Fifth Edition, October 2014.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# சங்க இலக்கியப் பெண்களின் வாழ்க்கை முறைகள்

**முனைவர் கு. பத்ம பிரியா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எம். ஒ. பி. வைணவ மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-2108-586X**
**DOI: 10.5281/zenodo.14744996**

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் பல்லாற்றலும் நிறைந்தவர்களாகத் திகழ்ந்தனர். அவர்களின் பண்பாடு போற்றத்தக்கதாய் இருந்தது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் நிறைந்தவர்களாக விளங்கினர். பெற்றோர்களின் ஆதரவில் வளர்ந்த பொழுதும், பின்னர் புகுந்த வீட்டில் தன் வாழ்வை அமைத்துக் கொண்டபோதும் அவர்களின் வாழ்வு போற்றத்தக்கதாக இருந்தது. பெண்ணின் பெருந்தக்கதான கற்பைப் போற்றி வாழ்ந்தனர்.*

**குறிப்புச் சொற்கள்:** சங்க இலக்கியம், தொல்காப்பியம், நிர்வாகத்திறன், ஆளுமைப் பண்பு

## முன்னுரை

இளமைக் காலத்தில் விளையாடி, மகிழ்ந்து சிறந்த இல்லறத்தை நடத்தி, வீரப்பண்பு மிக்கவர்களாகவும், ஆளுமைப் பண்பு கொண்டவர்களாகவும், விருந்தோம்பி உபசரித்து நிர்வாகத்திறன் கொண்டு இல்லறத்தையும் தான் சார்ந்த சமூகத்தையும் காத்தோம்பியதைச் சங்க இலக்கியங்களில் வழி இக்கட்டுரை ஆய்ந்துரைக்கின்றது.

## தொல்காப்பியம் காட்டும் பெண்கள்

தமிழர்களின் மரபு காக்கும் தன்மையுடையவர்களாக அன்றைய பெண்கள் இருந்தமை அறியமுடிகின்றது. அடக்கமும் அமைதியும் மனம் கோடாமையும், நல்லன பேசலும், அறிவும், உள்ளக் கருத்தை அறிந்து நடத்தலும் தலைவிக்கு இருக்க வேண்டிய குணநலன்கள் கொண்டு அக்காலப்பெண்கள் வாழ்ந்ததை,

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான (தொல்., 206)**

தொல்காப்பியத்தின் வழி அறியமுடிகின்றது.

## விளையாட்டுத்திறன்

பெண்கள் தங்களின் உடல் அமைப்பிற்கும் உள்ள நிலைக்கும் ஏற்ற விளையாட்டுகளைச் சங்ககால மகளிர் தேர்ந்தெடுத்து விளையாடியதை இலக்கியங்களில் நமக்கு எடுத்தியம்புகின்றது. பூக்கொய்தல், மணலிற் சிறுவீடுகட்டுதல், புனல் விளையாடல்,

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

ஊசல் அயர்தல், பந்தாடுதல், கழற்சிக்காய், அம்மனைக்காய் முதலியவற்றைக் கையாற் பிடித்து ஆடுதல் முதலியன மகளிர் தங்களின் இளம் பருவத்தில் விளையாடியுள்ளனர்.

மேலும், கவலையில் தேங்காமல், மகிழ்ச்சிமண்டிய முகத்தினராய், துள்ளலும், எழுச்சியும் நிரம்பிய வாழ்வினராய் மகளிர் சிறுசிறு விளையால்களில் ஈடுபட்டனர் என்பது சங்க இலக்கியங்களில் பல பாடல்களால் நன்கு புலனாகின்றது. இவ்வாறு விளையாட்டில் ஈடுபடும் மகளிர் கூட்டத்தினை அந்நாளில் "ஓரை ஆயம்" என வழங்கினர். வீட்டின் வெளியே வந்து விளையாட வேண்டிய இளம் பருவத்து மகளிர், தம் தோழியர்களுடன் கூடி விளையாடி மகிழாது, வீட்டின்கண்ணே அடைப்பட்டிருந்தல் அறனுடைய செய்கையும் ஆகாது என்று சங்ககாலச் சான்றோர்கள் கருதியதை,

**விளையா டாயமொடு ஓரை யாடாது**
**இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்**
**அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்**
**குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்**
**பொங்கிவரும் புதுநீர் நெஞ்சுணு ஆடுகம் (நற்., 68: 1-5)**

எனவே வீட்டிலேதங்கி சோம்பியிராமல், வீட்டின் புறத்தேபோந்து, "நுங்கும் நுரையுமாகப் பால்போல் கொப்புளித்துவரும் புதுப்புனலில் நெஞ்சு மகிழ நீந்தித் திளைத்து மகிழ்ந்தாடியதை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

நெய்தல் நில மகளிர் உரலில் உலக்கையிட்டு அவல் இடித்தலும், வள்ளைப் பூக்கொய்து மாலை தொடுத்தலும் செய்தனர் என்பதனைக் குறுந்தொகை, பதிற்றுப்பத்து அடிகள் வழி அறியமுடிகின்றது.

**பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை**
**ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி**
**ஒண்டொடி மகளிர் வண்ட லயரும் (குறுந்., 238: 1-3)**
**அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி**
**வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும் (பதி., 36: 3-4)**

மேலும், பொன்னாற் செய்த கழற்காய் கொண்டு, மணல் மேடுகளில் நின்று விடையாடினர் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

**செறியறிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்**
**பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும் (புறம்., 36: 3-4)**

மகளிர் அழகான அருவிகளில் குதித்துக் குடைந்து குடைந்து புனலாடுகிறார்கள்.

**காமர் கடும்புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்**
**தாமரைக் கண்புதைத்து அஞ்சித் தளர்ந்து அதனோடு**
**ஒழுகலான் (குறிஞ்சிக்கலி. 3: 1-2)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**கல்வி**

சங்க கால மகளிர் இயல்,இசை,கூத்து என்னும் தமிழின் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர்.இளமையிலேயேநிறைகல்வியுற்ற மகளிரை ”முதுக் குறைவி“ என அழைத்தனர். **யாயா கியளேவிழவு முதலாட்டி (குறுந்., 10: 1)** ஐம்பத்திற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் சங்க இலக்கியப் புலவர் வரிசையில் இடம் பெற்றிருக்கக் காணலாம். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஊட்டியார், ஊண்பித்தையார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கைப்பாடியினார், நச்செள்ளையார், நக்கண்ணையார், நெட்டிமையார், பெருங்கோப்பெண்டு, வெள்ளி வீதியார், இளவெயினி, பொத்தியார் முதலியோராவர். இவர்களில் ஔவையார் அரசர்களுக்கே அறிவுரை கூறித் திருத்திய பெருமாட்டி என்பது எல்லோரும் அறிந்ததாகும். காக்கைப்பாடினியம், சிறுகாக்கைப்பாடினியம் ஆகிய யாப்பிலக்கண நூல்கள் இரண்டனை எழுதிய காக்கைப்பாடினியார் என்ற பெண்பாற் புலவர் தம் இயற்றமிழ்ப் புலமை பாராட்டத்தக்கது. பெண்பாற் புலவர்களின் பாடல் நயமும், பொருள் நலமும் அக்கால மகளிர்தம் இயற்றமிழ்ப் புலமையினை இனிது எடுத்துரைப்பவையாகும்.

**இசைப்புலமைத் திறம்**

இயல்பிலேயே மகளிர் இசைக்கலையில் சிறந்து விளங்கினர். யானை முதலிய காட்டு விலங்குகளும் கூட அவர்தம் இசைக்கும் கட்டுப்பட்டன என்பதை அகநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகின்றது.

**ஒலியல் வார்மயிர் ஊரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலுங் கொள்ளாது நிலையிலும்பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும் (அகம்., 102: 5-9)**

குறமகள் ஒருத்தி, குறிஞ்சிப் பண்ணைத் திறத்துடன் பாட, தினைக்கதிரையுண்ண வந்த ஒரு யானை அதனை உண்ணாமலும், அவ்விடத்தைவிட்டுப் புடை பெயராமலும், அப்பண்ணால் நெஞ்சம் ஈர்க்கப்பட்டு மனமுருகி நின்று கொண்டே உறங்கிவிட்டது என்ற குறிப்பு மகளிர் தம் இசைத்திறனுக்கு ஒரு சான்றாகும்.

கொடிய பாலைநிலத்து மறவர்களும் பாலைப் பண்ணை மகளிர், யாழில் வாசித்த அளவில் தம் கொலைக்கருவி கையினின்று நழுவிக் கீழேவிழ அவ்விசையால் ஈர்க்கப்படுவர் என்பது மகளிர்தம் மாண்புறு இசைக்கு மற்றுமொரு சான்றாகும்.

**ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கம் மருவின் பாலை (பொரு. படை. 21-22)**

மேலும், போரிற் புண்பட்ட தம் கணவரது நோயினைத் தாம் பயின்ற இன்னிசையாகிய மருந்தினால் மகளிர் தணிவித்த செய்தி கீழ்வரும் பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**இசைமணி யெறிந்து காஞ்சி பாடி**

**நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்**

**காக்கம் வம்மோ காதலந் தோழீ**

**வேந்துறு விழுமற் தாங்கிய**

**பூம்பொறிக் கழற்கா னெடுந்தகை புண்ணே (புறம்., 281)**

மற்றொரு தலைவி, போர்களத்தில் புண்பட்ட தலைவனின் நோய்க் கொடுமையைத் தணிக்கப் பாட்டிசைத்த செய்தியை,

**கொழுநர் மார்பின்,**

**நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென**

**வறல்வாழ் கூந்தற் கொச்சியர் பாடல் (மலை., 302-304)**

சங்க மகளிர் நுண்கலையில் மிகுந்த திறமை உள்ளவர்களாகவும் ஆற்றல் உள்ளவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இசையறிவுடன் அழகியல் உணர்வும் மிகுந்தும் காணப்பட்டனர். நாட்டியக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். குரவை கூத்து, ஆய்ச்சியர் குரவை, துணங்கைக் கூத்து போன்ற கலைகளையும் கற்றிருந்தனர். பாடினி, விறலியர், கோடியர், ஆடு மகளிர், ஆடல், பாடலுடன் இசைக்கருவிகளை இசைத்து தங்கள் வாழ்வாதாரத்தை செம்மைப்படுத்தி வாழ்ந்ததை சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

**மகளிர் துணங்கை நாளும் வந்தன (கலித்., 86)**

**எல்வளை மகளிர் துணங்கை (குறுந்., 364: 5-6)**

**விருந்தோம்பல் பண்பு**

விருந்தோம்புதல் தலைவியின் உயர் பண்புகளில் ஒன்றாக இலக்கியங்களில் காட்டப்படுகின்றது. விருந்தோம்பல் பண்பினை எல்லா பெண்களும் உயிரினும் மேலானதாக மதித்துப் போற்றியிருக்கின்றனர்.

**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**

**நின்னொடு உண்டலும் புரைவது என்று ஆங்கு**

**அறம் புணை ஆகத் தேற்றிப் பிறகு மலை (குறிஞ்சி., 206-208)**

எல்லோருக்கும் உணவளித்து, எஞ்சியதை உண்டு வாழும் இல்லற வாழ்க்கைச் சிறப்பினை இப்பாடல் வழி அறியமுடிகின்றது. விதைக்கு என வைத்திருக்கும் தினையைக் கூட விருந்தினருக்குக் கொடுத்து உபசரித்து மகிழ்ந்ததை,

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**

**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**

**குறித்துமாறு எதிர்பை பெறாஅ மையின்,**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து (புறம்., 333: 9-12)**

என்ற அடிகள் வெளிப்படுத்துகிறது. அதாவது, வரகு தினை முதலிய உணவுப் பொருட்கள் இரவலர்களுக்கு வழங்கப்பட்டதால் விதைத்தானியங்களை உரலில் இட்டு இடித்து உணவு செய்து கொடுக்கிறாள். விருந்தினர்களை உபசரித்தலில் வசதி படைத்தவளாயினும், வறுமையில் வாடுபவளாக இருப்பினும் அனைவருமே பெருவிருப்புடன் திகழ்ந்தனர். தன் இல்லம் தேடி வருவோரை முகமலர்ச்சியுடனும், விருப்பத்துடனும் வரவேற்று உபசரித்தலை பெண்கள் முக்கிய கடமையாகக் கருதினர்.

**அமிழ்து அட்டு ஆனா கமழ்குய் அடிசில்**
**வரநர்க்கு வரையா வசைஇல் வாழ்க்கை**
**மகளிர் மலைத்தில் அல்லத மள்ளர் (புறம்., 10: 7-9)**

என்னும் அடிகள் அக்காலப்பெண்கள் விருந்தோம்பிய திறத்தை எடுத்துக்காட்டுகிறது.

உணவுப் பொருள் குறைவாக இருந்தாலும் வந்த விருந்தினரை வரிசைப்பட அமர வைத்து முறையிட்டு வழங்கும் கூர்மதியையும் கொண்டிருந்தனர் சங்கப் பெண்கள். விருந்தினர்களை உறவினர்களைப் போல் கருதி அவர்களை உபசரித்த விதத்தை,

**இளையரும் புரவியும் இன்புற, நீயும்**
**இல் உறை நல்விருந்து அயர்தல்**
**ஒல்லுதும் பெரும! நீ நல்குதல் பெறினே (அகம்., 300)**

என்னும் அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

**நிர்வாகத்திறன் மற்றும் ஆளுமைப்பண்பு**

தன் குடும்பம் வறுமை உற்றபோது, தன் கணவனோடு சேர்ந்து அவன் துன்பத்தில் தோள் கொடுக்கும் இல்லறப் பண்பு சங்கப் பெண்ணின் தனிப்பெரும் ஆளுமை கொண்டவளாக விளங்கியதை சங்கப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. தன் வீட்டில் வறுமையில் வாடுகின்ற சூழலிலும் நிறைவாக வாழும் சூழ்நிலையை,

**ஏவல மறுக்கும் சிறுவினையாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனர் கொல்!**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உண்ணாள் (நற்., 110)**

என்னும் நற்றிணைப் பாடல் அடிகள் மூலம் அறியமுடிகின்றது.

குமண வள்ளலிடம், பெரும் பெற்றுவந்த பெருஞ்சித்திரனார், தன் மனைவியிடம் பொருளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழுமாறு கூறுகிறார்.

**நின் நயத்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்**
**பல்மாண் கற்பின் நின் கிளைமுதலோர்க்கும்**
**கடும்பின் கடும் பசிதீர யாழ நின்**

**நெழுங் குறியெதிர்பை நலகியோர்க்கும்**
**இன்னோர்க்கும் என்னாது, என்னோடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்த்தும் என்னாது, நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே (புறம்., 163)**

என்னும் அடிகள் மூலம், தலைவன் கொண்டு வந்த செல்வத்தை மனைவியிடம் கொடுத்து எல்லோர்க்கும் வாரி வழங்கச் சொல்வது, தலைவி நிர்வாகத்தின் மேலிருந்த நம்பிக்கை மற்றும் அவளின் ஆளுமைச் சிறப்பையும் அறிய முடிகின்றது.

**வீரப்பண்பு**

மறக்குடி பெண்ணிடம் பாலருந்திய பிள்ளைக்கும் வீரப்பண்பு உள்ளது என்பதை, பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு பூண்ட பருவம் குறித்து,

**அவன் கண்ணி, தார் பூண்டு**
**தாலிகளைந் தன்றும் இலனே, பால் விட்டு**
**அயினியும் இன்று அயின்றனே, வயின் வயின்**
**வியந்தன்றும், இழிந்தன்றும், இலனே (புறம்., 77: 6-10)**

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. இத்தகைய வீரப்பண்பு மட்டுமல்லாது எதையும் தாங்குகின்ற பக்குவப்பட்ட மனநிலையும், தன்மானத்திற்காக உணர்ச்சிக்கு ஆட்படாத உள்ளத்தையும் கொண்டவளாகப் பெண் விளங்கியிருக்கிறாள் என்பதை மூதின் முல்லை துறைப்பாடல் விளக்குகின்றது.

**கெடுக சிந்தை, கடிக இவள் துணிவே**
**மூதில் மகளிராதல் தகுமே (புறம்., 279: 1-2)**

என்ற பாடலில் முதல் நாள் போரில் தன் தந்தையையும், மறுநாள் போரில் தன் கணவனையும் இழந்த பெண், ஒருத்தி மனங்கலங்காது, நாடு காத்தலுக்காக, தன் குடியின் ஒரு மகனையும் போர்களத்திற்கு அனுப்புகின்ற துணிவு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனை,

**ஒருமகன் அல்லது இல்லோள்,**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே (புறம்., 279: 10-11)**

இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன. "பண்டைத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின், பெண் கற்கும் உரிமையும் கவிபாடும் உரிமையும் காதலுரிமையும், காதற்களவு செய்யும் உரிமையும் காதலனை இடித்துரைக்கும் உரிமையும் இல்லறத் தொழிலுரிமையும் பெருமையும் புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தாள்" (ப. 152) என்று வ.சு.ப மாணிக்கனார் *தமிழ்க்காதல்* என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

**தொகுப்புரை**

இளமைக் காலத்தே தானும், தன்னைச் சார்ந்தவர்களையும் மகிழ்வுடனும், ஆரோக்கியமானவளாகவும், இருக்க விளையாடி, மகிழ்ந்தனர். இசைப்புலமையும், வீர பண்பும்

கொண்டு தன் இல்லத்தையும் தான் சார்ந்த சமூகத்தையும் காத்து ஓம்பும் பெற்றி மிக்கவளாக விளங்கியமையை சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறியமுடிகின்றது. சங்க இலக்கியங்கள் காட்டும் பெண்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்களாக விளங்கியதையும் இக்கட்டுரை ஆய்ந்துரைக்கின்றது.

**குறிப்புகள்**

[1] தட்சிணாமூர்த்தி, அ. முனைவர். *ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[2] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[3] பாலசுப்பிரமணியன், கு. வெ. முனைவர். *புறநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[4] பாலசுப்பிரமணியன், கு. வெ. முனைவர். *நற்றிணை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[5] பாலசுப்பிரமணியன், சி. முனைவர். *சங்ககால மகளிர்* பாரி நிலையம், 1983, சென்னை.

[6] மோகன், இரா. முனைவர். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. புத்தகம் -1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[7] மோகன், இரா. முனைவர். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. புத்தகம் -2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[8] லெனின், க. முனைவர். "சங்க இலக்கியத்தில் வாழ்வியல் நோக்கில் பெண்கள்." *இனியவை கற்றல் பன்னாட்டத் தமிழியல் மின்னிதழ்* – ஜூலை 2021, ISSN: 3048-5495.

[9] விசுநாதன்,அ, முனைவர். *கலித்தொகை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98. ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014.

[10] ஜெயக்குமாரி, ச, முனைவர். "சங்க இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை." *புதிய அவையம்*, ISSN: 2456-821X.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.